# தமிழ் இலக்கணம்

## தமிழிலக்கணம் ஐந்து வகைப்படும்.

அவை,
- எழுத்து
- சொல்
- பொருள்
- யாப்பு
- அணி ஆகியன.

நமக்குக் கிடைத்துள்ள நூல்களுள் மிகப்பழமையான இலக்கணநூல் தொல்காப்பியம், தொல்காப்பியர் இயற்றிய இந்நூல் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றனுக்கு இலக்கணம் வகுத்துள்ளது.

எழுத்திலக்கணம் : எழுத்துகளின் வகை, தொகை, மொழி முதல் மொழியிறுதி எழுத்துகளின் இலக்கணத்தை வகுத்துள்ளது.

சொல்லிலக்கணம் : சொல்,அதன் வகைகளுக்கு இலக்கணம் கூறுகிறது.

பொருளிலக்கணம் : தமிழர் தம் வாழ்வியல் பொருள்களாக வகுத்துக் கொண்ட அகம்,புறம் ஆகியவற்றின் இலக்கணம் கூறுகிறது.

யாப்பு இலக்கணம் : செய்யுள் வகை, செய்யுளின் உறுப்புகள் யாப்பு இயற்றுதலின் இலக்கணம் .

அணியிலக்கணம் : செய்யுளுக்கு அழகு சேர்க்கும் அணிக்கலன்களாகிய அணிகள் பற்றிக் கூறுகின்றது.

எழுத்து :-

எழுத்துகளின் வகை, தொகை .

எழுத்து - எழுப்பப்படுவது - ஒலி வடிவம்
எழுதப்படுவது - வரி வடிவம்.

எழுத்து வகை :

முதல்
சார்பு

முதலெழுத்துகள் : உயிரும் , மெய்யும் .

சார்பெழுத்துகள் :
- உயிர்மெய்
- ஆய்தம்
- உயிரளபெடை
- ஒற்றளபெடை
- குற்றியலிகரம்
- குற்றியலுகரம்
- ஐகாரக் குறுக்கம்
- ஔகாரக் குறுக்கம்
- மகரக் குறுக்கம்
- ஆய்தக் குறுக்கம் .

பெயர்க்காரணம் : முதலெழுத்துகள்
- முதன்மையாக விளங்குவதால்
- தனித்து இயங்கும் தன்மையால்
- பிற எழுத்துகள் பிறக்கக் காரணமாய் அமைவதால்

சார்பெழுத்துகள் :
- முதலெழுத்துகளைச் சார்ந்து பிறப்பதால்
- தனித்தியங்காத் தன்மையால்

எழுத்துகளின் தொகை ( எண்ணிக்கை )

முதலெழுத்துகள்
உயிர் ( 12 )

| உயிர்க்குறில் - ( 5 ) | உயிர்நெடில் - (7) |
|---|---|
| அ | ஆ |
| இ | ஈ |
| உ | ஊ |
| எ | ஏ |
| ஒ | ஐ |
| | ஓ |
| | ஔ |

உயிர்க் குறிலுக்கு உயிர் நெடில் இனவெழுத்தாகும் .

அ - ஆ ( ஐ - இ, ஔ - உ )

இ - ஈ
உ - ஊ
எ - ஏ
ஒ - ஓ

மெய்யெழுத்துகள் - 18

- வல்லினம் 6 ( க்ச்ட்த்ப்ற் )
- மெல்லினம் 6 ( ங ஞ ண ந ம ன )
- இடையினம் 6 ( ய ர ல வ ழ ள )

சார்பெழுத்துகளின் தொகை :

1. உயிர் மெய் : ( 216 )

உயிர் பன்னிரண்டு எழுத்துக்களும் மெய் பதினெட்டு எழுத்துகளுடன் தனித்தனியே ஊழப் பிறக்கும் எழுத்துகள் உயிர்மெய் எழுத்துக்களாகும் .

( 12 x 18 - 216 )

உயிர் மெய்க் குறில் - 5x18 = 90
உயிர் மெய் நெடில் - 7x 18 = 126 216

| | | | |
|---|---|---|---|
| வல்லின உயிர்மெய்க்குறில் - | 6x5 =30 | | |
| வல்லின உயிர்மெய் நெடில் - | 6x7 =42 | - 72 | |
| மெல்லின உயிர்மெய்க்குறில் - | 6x5 =30 | | |
| மெல்லின உயிர்மெய் நெடில் - | 6x7 =42 | - 72 | 216 |
| இடையின உயிர்மெய்க்குறில் - | 6x5 =30 | | |
| இடையின உயிர்மெய் நெடில் - | 7x5 =42 | - 72 | |

2. ஆய்தம் -தனி நிலை
அஃகேனம்
முப்பாற்புள்ளி .

3. உயிரளபெடை - ( அளபு+எடை ) - அளபு எடுத்தல்
நீண்டு ஒலித்தல்

ஓர் எழுத்துத் தனக்குரிய ஒலி அளவிலிருந்து ( மாத்திரை ) நீண்டு ஒலிப்பது.

உயிரளபெடை - உயிரெழுத்து நீண்டு ஒலிப்பது.( செய்யுளில் ஓசை குறையுமானால் அதனை நிறைவு செய்ய எழுத்துகள் நீண்டு ஒலிக்கும் )

உயிரளபெடை மூவகைப்படும் .

SUCCESS ACADEMY

1. செய்யுளிசை அளபெடை : ( இசைநிறை அளபெடை ) செய்யுளின் ஓசையை நிறைவு செய்தற்பொருட்டு உயிர்நெடில் எழுத்துகள் அளபெடுத்தல் .
உழாஅர் உழவர்
ஓஒதல் வேண்டும்
தொழாஅள்
2. இன்னிசை அளபெடை : செய்யுளில் ஓசை குறையாத பொழுதும் செவிக்கு இனிய ஓசையைத் தரும் பொருட்டு உயிர்க்குறில் நெடிலாகி மேலும் அளபெடுப்பது.
கெடுப்பதூ உம் - எடுப்பதூஉம்
3. சொல்லிசை அளபெடை : செய்யுளில் ஓசை குறையாவிடத்தும் பெயர்ச் சொல்லை வினைச் சொல்லாக மாற்றும் பொருட்டு அளபெடுத்தல் .
குடிதழீஇ ( தழீ - தழுவுதல் ) ( தழீஇ - தழுவுதல் )
அடிதழீஇ
ஒற்றளபெடை : செய்யுளில் ஓசை குறையுமிடத்து அதனை நிறைவு செய்ய ஒற்றெழுத்துகள் ( மெய்யெழுத்துகள் ) அளபெடுத்தல் .
கண்ண் கருவிளை
இலங்ங்கு நூல்
ங் ஞ் ண் ந் ம் ன் வ் ய் ல் ள் - அளபெடுக்கும் ஒற்றெழுத்துகள்.
குற்றியலிகரம் - குறுமை + இயல்+ இகரம்
குறுகிய ஓசையுடைய இகரம்.
நாடு + யாது ⇒ நாடியாது
கேள்+ மியா ⇒ கேண்மியா
குற்றியலுகரம் : குறுமை - இயல் - உகரம்
குறுகிய ஓசையுடைய உகரம் .
வகை → நெடில் தொடர் ( நாடு, காசு )
உயிர்த் தொடர் - ( வரகு, முரசு)
வன்றொடர் - ( பத்து, பாக்கு )
மென்றொடர் - ( நண்டு ,பந்து )
இடைத் தொடர் - ( சால்பு , மார்பு )
ஆய்தத் தொடர் - ( எஃகு , அஃது)
ஐகாரக் குறுக்கம் : "ஐ" என்னும் நெடிலெழுத்துத் தனக்குரிய இரு மாத்திரையளவிலிருந்து குறைந்து ஒன்றரை மாத்திரையாகவும் ஒரு மாத்திரையாகவும் ஒலிப்பது.
ஐப்பசி - மொழி முதல் குறுக்கம் - 1½ மாத்திரை
தலைவன் - மொழி இடைக் குறுக்கம் - 1 மாத்திரை
திண்ணை - மொழியிறுதிக் குறுக்கம் - 1 மாத்திரை
ஔகாரக்குறுக்கம் : "ஔ" என்னும் நெடிலெழுத்துத் தன் மாத்திரையளவிலிருந்து குறைந்து ஒலித்தல் .
ஔவையார் - மொழிமுதல் குறுக்கம் 1½ மாத்திரை
மௌவல் - மொழி முதல் குறுக்கம் 1½ மாத்திரை
மகரக்குறுக்கம் : "ம்" என்னும் மெய்யெழுத்து தனக்குரிய அரை மாத்திரைஅளவிலிருந்து கால் மாத்திரையாகக் குறைந்து ஒலிப்பது.
வரும் வண்டி
தரும் வளவன் .
ஆய்தக்குறுக்கம் : ஆய்த எழுத்தாகிய "ஃ" தன் மாத்திரையளவிலிருந்து குறைந்து ஒலித்தல்.
( ½ மாத்திரையிலிருந்து ¼ மாத்திரையாக )
கல்+தீது→ கஃறீது
பல் + துளி→ பஃறுளி .
மாத்திரை : எழுத்துகளை ஒலிப்பதற்கு ஆகும் கால அளவு.
உயிர்க்குறில் , உயிர்மெய்க்குறில் -1 மாத்திரை


SUCCESS ACADEMY

உயிர்நெடில் , உயிர் மெய்நெடில் - 2 மாத்திரை
மெய் , ஆய்தம் - ½ மாத்திரை
குறிப்பு : இம்மாத்திரையளவு அதிகமாவது அளபெடை :
குறைவது குறுக்கம் .
மாத்திரைக்கான அளவு :- இயல்பாகக் கண்ணிமைக்கும் நேரம் கை நொடிக்கும் நேரம்.

**மாதிரி வினாக்கள் :**

1. தமிழிலக்கண வகை அ) இரண்டு ஆ) ஐந்து இ) மூன்று ஈ) நான்கு
2. சார்பெழுத்துகளின் வகை அ) ஐந்து ஆ) இரண்டு இ) பத்து ஈ) நான்கு
3. வாழ்வியல் பொருள்கள் அ) ஒன்று ஆ) இரண்டு இ) மூன்று ஈ) நான்கு
4. அளபெடைக்குரிய மாத்திரை அ) ஒன்று ஆ) நான்கு இ) ஐந்து ஈ) மூன்று
5. அளபெடையின் வகை அ) இரண்டு ஆ) ஆறு இ) மூன்று ஈ) ஒன்று
6. உயிரளபெடையின் வகை அ) ஒன்று ஆ) இரண்டு இ) மூன்று ஈ) நான்கு
7. பெயர்ச்சொல்லை வினைச் சொல்லாக மாற்றுவது அ) உயிரளபெடை
ஆசொல்லிசையளபெடை இ) செய்யுளிசையளபெடை ஈ) ஒற்றளபெடை
8. ஆய்த எழுத்து அளபெடுப்பது அ) உயிரளபெடை ஆ) ஒற்றளபெடை இ) அளபெடுக்காது
9. "ஐ" - இவ்வெழுத்திற்குரிய இனவெழுத்து -------- அ) ஔ ஆ) ஈ இ) ய் ஈ) இ
10. குறுக்கம் ------ வகைப்படும் . அ) 4 ஆ) 5 இ) 6 ஈ) 3
11. மொழி முதல் ஐகாரக் குறுக்கம் பெறும் மாத்திரையளவு --------அ)2 ½ ஆ) 3 இ) 1 ½ ஈ) 1
12. ஔகாரக் குறுக்கம் மொழிக்கு ------ மட்டும் வரும் .
அ) முதலில் ஆ) இடையில் இ கடைசியில் ஈ) மூவிடங்களில்
13. குற்றியலுகரம் ------- வகைப்படும் . அ) 5 ஆ) 6 இ) 7 ஈ) 4
14. வல்லினம் ------- வகைப்படும் . அ) மூன்று ஆ) இரண்டு இ) நான்கு ஈ) ஆறு
15. உயிர்மெய் நெடில் எழுத்துகள் மொத்தம் -------- . அ) 126 ஆ) 90 இ) 72 ஈ) 42
16. அகர வரிசைப்படுத்துக. அ) அரசன் , எறும்பு , ஆதிரை , ஔவையார்
ஆ) அரசன் ,ஔவையார் , ஆதிரை , எறும்பு இ) அரசன் ஆதிரை எறும்பு ஔவையார்
17. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| அ) குறிஞ்சி | - | வயல் | |
| ஆ) முல்லை | - | காடு | |
| இ) மருதம் | - | கடல் | |
| ஈ) நெய்தல் | - | மலை | |

| விடை: | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 |
| ஆ) | 4 | 2 | 3 | 1 |
| இ) | 4 | 1 | 2 | 3 |
| ஈ) | 4 | 2 | 1 | 3 |

18. பிரித்தெழுதுக :- ( எந்தாய் ) அ) எம்+தாய் ஆ) எந்+தாய் இ) என் +தாய் ஈ) எந்த+ தாய்
19. அஃறிணை அ) அஃது+ திணை ஆ) அல்+ திணை இ) அஃறு+திணை ஈ) அ+திணை
20. ஊற்றுக் கோல் அ) ஊற்று+கோல் ஆ) ஊன்று+ கோல் இ) ஊறு+கோல் ஈ) ஊற்றுக்+கோல்
21. எதிர்ச் சொல் கூறுக : அகலாது அ) மறையாது ஆ) விலகாது இ) அணுகாது ஈ) பிறழாது
22. சுறுசுறுப்பு அ) தூக்கம் ஆ) பயம் இ) அருவெறுப்பு ஈ) மடி
23. "தே" என்னும் ஓரெழுத்து ஒருமொழிக்குரிய பொருள் .
அ) தேய்தல் ஆ) தேடுதல் இ) தெய்வம் ஈ) அரசன்
24. "மா" என்னும் சொல்லின் பொருள் அ) யானை ஆ) மாடு இ) விலங்கு ஈ) கரடி
25. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக : அ) கருமை ஆ) இளமை இ) செம்மை ஈ) பசுமை
26. பொருந்தா ஒன்றைக் கண்டறிக : அ)குறிஞ்சி ஆ) வஞ்சி இ) மருதம் ஈ) முல்லை
27. சந்திப் பிழையற்ற தொடர் எது?
அ) புது போர்வை ஆ) தேடாப் பொருள் இ) கதை கேள் ஈ) வீசியக் காற்று
28. மரபுப் பிழை நீக்குக.
அ) யான் கவிஞன் அல்ல ஆ) யான் கவிஞன் அல்லேன் இ) யான் கவிஞன் அன்று
29. மரபுப் பிழையற்ற தொடர் எது?
அ) சிங்கக் குட்டி ஆ) சிங்கக் குருளை இ) சிங்கப்பறழ் ஈ) சிங்கக் கன்று
30. மரபுப் பிழையற்ற தொடர் எது ? அ) ஓவியம் வரைந்தாள் ஆ) ஓவியம் புனைந்தாள்
இ) ஓவியம் தீட்டினாள் ஈ) ஓவியம் செய்தாள் .